மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம்
வத்திராயிருப்பு
**அசல் வழக்கு எண். 40/2024**

வா.சா. 1 செல்வம்
நாள் 12.11.2025

**1ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை:**

எனக்கு பூர்வீகம் அழகாபுரி என்றால் சரிதான். என்னுடைய தாய் கிராமம் வடுகப்பட்டி என்றால் சரிதான். 1ம் பிரதிவாதிக்கு பூர்வீகம் அழகாபுரி தான் என்றால் இல்லை கரிசல்குளம். வடுகப்பட்டி கிராமத்தில் நான் கிரையம் வாங்கியதாக சொல்லக் கூடிய சொத்துக்கான சர்வே எண் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. ஆனால் சொத்து வடுகப்பட்டி கிராமத்தில் சரிதான். 1வது தகப்பனார் பெயர் சுப்பையா என்றால் சரிதான். சுப்பையாவின் உறவினர் முறை தான் எனது மனைவி என்றால் சரிதான். நான் கிரையம் வாங்கி சொத்து ஆதியில் சுப்பையா என்பவருக்கு பாத்தியப்பட்ட சொத்து என்ற விபரம் எனக்கு தெரியுமா என்றால் சரியல்ல அது சுந்தர் மகன் அழகர்சாமி என்பவருக்கு பாத்தியப்பட்ட சொத்து. வழக்கு சொத்துக்கும் அதனுடன் இணைந்த மற்ற சொத்துக்களுக்கும் கிழக்கே மற்றும் தெற்கே சாலை உள்ளது என்றால் சரிதான். மேற்கே மற்றும் வடக்கே கோபால் என்பவருக்கு பாத்தியப்பட்ட சொத்து உள்ளது என்றால் சரிதான்.

கோபால் எனக்கு உறவினர் என்றால் சரிதான். கிரையம் வாங்கும் பொழுது சொத்து ஆதியில் யாருக்கு பாத்தியப்பட்டு இருந்தது என்று நான் விசாரித்து தெரிந்து கொள்ளவில்லை என்றால் சரியல்ல. வழக்கு சொத்து ஆதியில் அழகர்சாமிக்கு பாத்தியப்பட்ட சொத்து என்று நான் சொல்லும் நிலையில் அதை நிரூபிக்க ஆவணங்கள் எதுவும் நீதிமன்றத்தில் நான் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. அழகர்சாமி என்பவரை நான் இந்த வழக்கில் தரப்பினராக சேர்க்கவில்லை என்றால் சரிதான். வழக்கு சொத்து ஆதியில் 1வது பிரதிவாதியின் தகப்பனாருக்கு பாத்தியப்பட்டது என்ற விபரம் எனக்கு தெரியும்

என்றும், அது தெரிந்திருந்தும் மோசடியாக நான் கிரையம் பெற்றுள்ளேன் என்று சொன்னால் சரியல்ல.

கிரையம் வாங்குவதற்கு முன்பே வில்லங்கச் சான்றிதழ் பெற்று நான் சரி பார்த்தேன் என்றால் சரி பார்த்து தான் கிரயம் வாங்கினேன். வில்லங்கச் சான்றிதழ் போட்டு பார்த்ததாக சொல்லும் நிலையில் அந்த சான்றிதழை நான் நீதிமன்றத்தில் சமர்ப்பிக்கவில்லை என்று சொன்னால் சரிதான். நான் எவ்வளவு அளவுள்ள சொத்தை கிரையம் வாங்கினேன் என்றால் 6 1/2 சென்ட். விளக்கு சொத்தோடு சேர்ந்து அதனுடன் இணைந்த மற்ற சொத்துக்களும் சேர்த்து மொத்தம் எவ்வளவு இருக்கும் என்றால் 1 ஏக்கர் 17 சென்ட். என்ன பரிகாரம் கேட்டு வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சொத்தை எனக்கு வேண்டும் என்று கேட்டு வழக்கு தாக்கல் செய்துள்ளேன்.

2 வது பிரதிவாதி மாலதி அம்மாள் என்பவரிடமிருந்து தான் நான் கிரயம் பெற்றேன் என்றால் சரிதான். மாலதி அம்மாளுக்கு கிரையம் கொடுத்தது யார் என்று தெரியுமா என்றால் அழகர்சாமி கிரையம் கொடுத்தார். மாலதி அம்மாள் வாங்கிய கிரையமும், நான் வாங்கி கிரையமும் ஒரே தேதியில் பெறப்பட்ட கிரையம் என்று சொன்னால் மாலதி அம்மாள் கிரையம் வாங்கியது குறித்து எனக்கு தெரியாது. வா.சா.ஆ.1 ஆவணத்தில் கண்ட சொத்து மனைகளாக பிரிக்கப்பட்டு விற்பனை செய்யப்பட்டதாக தான் சொல்லப்பட்டுள்ளது என்று சொன்னால் சரிதான். வா.சா.ஆ.1 ஆவணத்தில் கண்ட சொத்து 2 வது பிரதிவாதிக்கு எவ்வாறு பாத்தியப்பட்டது என்று குறிப்பிடவில்லை என்று சொன்னால் சரியல்ல.

2 வது பிரதிவாதியின் கணவர் பெயர் தங்கமணி என்றால் சரிதான். மேற்படி தங்கமணி எந்த வரும் நீதிமன்றத்திற்கு என்னுடன் வந்துள்ளார் என்றால் சரிதான். நானும், 2 வது பிரதிவாதியும் கூட்டு சேர்ந்து கொண்டு 1 வது பிரதிவாதிக்கு பாதிக்கப்பட்ட சொத்தை அபகரிக்க வேண்டும் என்ற எண்ணத்தில் மோசடியாக ஆவணம் உற்பத்தி செய்துள்ளோம் என்று சொன்னால் சரியல்ல. நான் கிரயம் பெற்ற ஆவணத்தில் சொத்தில் ஏதேனும் வில்லங்கம் ஏற்பட்டால்

அதை 2வது பிரதிவாதியே தீர்த்துக் கொடுக்க வேண்டும் என்று எழுதப்பட்டுள்ளது என்றால் சரிதான். 2வது பிரதிவாதியை வழக்கில் தரப்பினராக நான் சேர்த்திருந்தாலும் அவருக்கு எதிராக எந்த பரிகாரமும் நான் கேட்கவில்லை என்று சொன்னால் சரியல்ல.

நான் கிரையம் பெற்ற சொத்துக்கள் மற்றும் அதனுடன் இணைந்த மற்ற சொத்துக்கள் மனை பிரிவுகளாக பிரிக்கப்படாமல் தற்போது வரை ஒரே சொத்தாக தான் இருந்து வருகிறது என்று சொன்னால் சரியல்ல. வழக்கு சொத்து 1வது பிரதிவாதிக்கு பாத்தியப்பட்ட சொத்து என்றும், அதை பொறுத்து அவர் எவ்வித ஆவணமும் எந்த காலத்திலும் பிறப்பித்துக் கொடுக்கவில்லை என்ற விபரத்தை நான் கேட்டு தெரிந்து கொள்ளவில்லை என்று சொன்னால் சரியல்ல. 1வது பிரதிவாதி நான் சொல்வது போல என்னுடைய சொத்தை அபகரிக்க வேண்டிய அவசியம் எதுவும் இல்லை என்று சொன்னால் சரியல்ல. சொத்தை அபகரிக்க முயற்சி செய்ததாக காவல் நிலையத்தில் புகார் கொடுத்ததாக சொல்லியுள்ள புகார் மனுவினை நான் நீதிமன்றத்தில் ஆவணமாக தாக்கல் செய்யவில்லை என்று சொன்னால் சரிதான்.

நான் சொன்னது போல 1வது பிரதிவாதி தபசில் சொத்தில் அத்துமீறி நுழைந்திருந்தால் அதற்கான ஆவணங்களை நீதிமன்றத்தில் தாக்கல் செய்திருப்பேன் என்று சொன்னால் சரியல்ல. வா.சா.ஆ.1 ஆவணத்தின் சான்றிட்ட நகலைத்தான் நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்து உள்ளேன் என்றால் சரிதான். அசல் ஆவணம் என் வாசம் உள்ளது. அசல் ஆவணத்தை வைத்துக் கொண்டு நகல் ஆவணத்தை வைத்து நான் தாக்கல் செய்துள்ள வழக்கு நிலைக்கத்தக்கது அல்ல என்று சொன்னால் சரியல்ல. 2வது பிரதிவாதி பெற்ற கிரையமானது சட்டப்படி செல்லத்தக்கது அல்ல என்று நீதிமன்றம் தீர்வு கண்டுள்ளதால் அதன் அடிப்படையில் நான் பெற்றுள்ள கிரையமும் செல்லத்தக்கது அல்ல என்று சொன்னால் சரி அல்ல. 1வது பிரதிவாதி தாக்கல் செய்துள்ள எதிர் வழக்குரையை நான் படித்து தெரிந்து கொண்டேன் என்றால் தெரிந்து கொண்டேன்.

2 வது பிரதிவாதி பெற்ற கிரையமானது ரத்து செய்யப்பட்டு விட்டது என்றும், நீதிமன்ற உத்தரவின் அடிப்படையில் கிரைய ஆவணம் ரத்து செய்யப்பட்ட விபரம் வில்லங்க சான்றிதழில் காணப்படுகிறது என்றும் எதிர் வழக்குரையில் 1 வது பிரதிவாதி சொல்லியுள்ள சங்கதிகளை நான் தெரிந்து கொண்டேன் என்றால் எனக்கு படிப்பறிவு இல்லை. ரத்து செய்யப்பட்ட ஆவணத்தின் அடிப்படையில் நான் பெற்ற கிரையமும் செல்ல தக்கது அல்ல என்று சொன்னால் சரியல்ல. அதன் அடிப்படையில் நான் கேட்டுள்ள பரிகாரம் எனக்கு கிடைக்கக்கூடியது அல்ல என்று சொன்னால் சரியல்ல. வழக்கு சொத்தினை தற்போது வரை 1 வது பிரதிவாதி தான் அனுபவம் செய்து வருகிறார் என்றும் வழக்குக்காக நான் அனுபவம் செய்து வருவதாக பொய்யாக சொல்லி உள்ளேன் என்றால் சரியல்ல. நான் கிரையம் பெற்றதற்கான முன் கிரைய ஆவணத்தினை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்று சொன்னால் சரியல்ல. நானும், 2 வது பிரதிவாதியும் வஞ்சக கூட்டு சேர்ந்து கொண்டு தாக்கல் செய்துள்ள வழக்கில் எனக்கு எந்த பரிகாரமும் கிடைக்கக்கூடியது அல்ல என்று சொன்னால் சரியல்ல.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல நான் சொல்ல தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் சரிபார்க்கப்பட்டு சாட்சிக்கு படித்துக்காட்டப்பட்டு அவரால் ஒத்துக்கொண்டு கையெழுத்திட்டுள்ளார்.

ஒம்/-எம்.இராமநாதன்/-
மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்
வத்திராயிருப்பு